ශ්‍රී ලංකා ජනාධිපති

இலங்கை சனாதிபதி

**President of Sri Lanka**

## சுதந்திர தின செய்தி

சுதந்திரத்தின் மகிமையை புரிந்துகொள்ளவேண்டுமாயின் அடிமைத்தனத்தினால் ஏற்படுத்தப்படும் அவமானத்தின் ஆதங்கத்தை புரிந்திருத்தல் வேண்டும். அதனாலேயே நம் நாட்டின் சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு நாம் எமது கௌரவத்தினைச் செலுத்த கடமைப்பட்டிருக்கின்றோம். சுதந்திரத்தின் பெருமையை நினைவுகூரும் இன்றைய தினத்தில் எமது தாய் நாட்டை ஒரு சுதந்திர பூமியாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர்கள் அனைவருக்கும் நாம் எமது ஒட்டுமொத்த தேசத்தின் மரியாதையினை மனம் நிறைந்த பக்தியுடனேயே தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒரு சுயாதீன தேசம் என்றவகையில் இலங்கை தனது சுதந்திரத்தின் ஏழாவது தசாப்தத்தை பூர்த்திசெய்யும் இவ்வேளையானது, கடந்த காலங்களில் நாம் நமதாக்கிக்கொண்ட சகலவித சாதகமான வெற்றிகளையும் மற்றும் உணர்வுபூர்வமாக மீட்டுப்பார்க்கக்கூடிய மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும். கடந்துவந்த அந்த கால பகுதியில் நிச்சயம் நாம் பெற்றிருக்க வேண்டிய மானிட அபிவிருத்தி இலக்குகள், முகங்கொடுக்க நேர்ந்த சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு போன்ற சவால்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் பலவிதமான சவால்களையும் தைரியமான விதத்தில் கடந்து வந்துள்ளோம் எனக் கருதமுடியும்.

நமக்கே உரித்தான தனித்துவத்தினால் புடம்போடப்பட்ட ஒரு இனம் என்றவகையில் எம்மால் எந்தவிதமான சவால்களுக்கும் சளைக்காது அவற்றை எதிர்கொள்ளும் ஆற்றல் இருக்கின்றதென்பதை எமது வரலாறு மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அந்தவகையில் இலங்கையர்களாகிய எம்மால் எந்தவகைய சூழலிலும் தலைநிமிர்ந்து எழுந்து நிற்க முடியும் என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமே தற்போது எம்முன் இருக்கின்றது. அதனை சாதிக்கவேண்டுமாயின் பல போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதை இந்த இத்தருணத்தில் நினைவு கூரவேண்டும். அனைவருக்கும் சம வாய்ப்புக்கள் கிடைக்கின்ற பசுமையான அபிவிருத்தியை நோக்கி செல்லுதல், அதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், நமது மனித வளங்களை உலக தரத்திற்கு உயர்த்துவதன் மூலம் நாட்டிற்கு நற்பயனைப் பெற்றுக்கொடுத்தல் ஆகியன எமது நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடம்பிடிக்க வேண்டிய இலட்சியங்களாக இருக்கின்றன.

அத்தோடு உண்மையான சுதந்திரம் என்பது அரசின் சுதந்திரம் மாத்திரம் அல்ல என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ளுதல் அவசியமாகின்றது. சுதந்திரம் அர்த்தபுஷ்டியாக வேண்டுமாயின் குறிப்பிட்ட இனத்தின் பொருளாதார சுதந்திரமும் கலாசார சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய யதார்த்தமாகும். அந்தவகையில் பொருளாதார சுதந்திரத்தை நோக்கிய எமது பயணத்தில் இந்த ஆண்டு மிகுந்த முக்கியத்துவம் வகிக்கின்றது.

ஒரு நாடு என்றவகையில் அன்று போல் இன்றும் எதிர்காலத்திலும் மிகுந்த உறுதிப்பாட்டுடன் எமது நீண்டகால நோக்குகளுடன் பிணைந்திருப்பதே அவற்றை வெற்றிகொள்ள வழிவகுக்கும். மொரகஹகந்த நீர்த்தேக்க நிர்மாணப்பணிகளின் பூர்த்தியுடன் மகாவலி அபிவிருத்தி செயற்திட்டம் மிகச் சிறப்பாக பூர்த்தியடைந்திருக்கின்றது என்ற விடயம் இதற்கு சான்று பகர்கின்றது. அத்துடன் இவ்வருடத்தை "தேசிய உணவு உற்பத்தி வருடமாக" பிரகடனப்படுத்தியதன் நோக்கமும் எமது தேசம் ஏழு தசாப்தங்களாக கொண்டுள்ள 'உணவு உற்பத்தியில் தன்னிறைவு' என்ற கனவை நனவாக்கிக் கொள்வதே ஆகும்.

சுதந்திரம் அடைந்து ஏழு தசாப்தங்கள் நிறைவடையும் இந்த அபிமானத்திற்குரிய தருணத்தில் நாட்டின் நலனிற்காக நிறைவேற்ற வேண்டிய அனைத்துக் கடமைகளையும் குறைவின்றி நிறைவேற்றுவேன் என உறுதிபூணும் அதேவேளை, எமது தேசத்தின் உண்மையான பலம் நம்மவர்களின் ஒற்றுமையும் உறுதிப்பாடுமே ஆகும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மைத்ரிபால சிறிசேன

2018 பெப்ரவரி 04 ஆம் திகதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு

Democratic Socialist Republic of Sri Lanka